கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : அம்மாதிரி நிலங்கள் இருக்கின்றன என்று சொன்னுல், ஆட்சேபணை இல்லை. ஆனுல், இப்பொழுது அங்கிருக்கும் நிலங் களெல்லாம் களர் நிலங்களாக இருக்கின்றன. அப்படிப்பட்ட நிலங்கள்தான் சுமார் மூவாயிரம் ஏக்கர் அங்கு இருக்கின்றன.

திரு. ம. கமலநாதன் : கூட்டுறவு சாகுபடி முறை வெற்றிகாமாக நடைபெறுகிறதா ? எங்கெங்கு வெற்றிகரமாக நடைபெறு கின்றது ? எங்கெங்கு வெற்றிகரமாக நடைபெறவில்லை ?

கனம் திரு. ந. நல்லசேனுபதி சர்க்கரை மன்ருடியார் : இப்பொழுது என்னிடம் அந்தத் தகவல் இல்லை. வெற்றிகரமாக நடத்த வேண்டும் என்பதுதான் என்னுடைய அவாவும் கூட.

அரிசன நல இலாகா ஆசிரியர்கள்

*** 669 கேள்வி.—திரு. சீ. சிவசுப்பிரமணியன் :** கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

பஞ்சாயத்து யூனியன் பள்ளியில் வேலை செய்யும் ஆசிரியர் களுக்கு கல்வி விஸ்தரிப்பு அதிகாரிகளாக (Education Extension Officers) உத்தியோக உயர்வு கொடுப்பது போல் நம் மாநிலத்தில் அரிசன நல இலாகாவில் ஆசிரியர்களாக வேலை செய்யும் ஆசிரியர் களுக்கு உத்தியோக உயர்வு கொடுக்க உத்தேசமுண்டா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தற்போதுள்ள விதிகளின்படி, பொது விதிகளைச் சேர்ந்த அட்டவணையில் நிர்ணயித்துள்ள குறைந்த அளவு பொதுக் கல்வி பெற்றிருக்கும் அரிஜன நலப் பள்ளி ஆசிரியர்கள், கல்வி வளர்ச்சி அதிகாரிகளாக நியமிக்கப் படலாம். காலியாகும் இடங்களுக்கு ஏற்ப அத்தகைய ஆசிரியர் களின் விண்ணப்பங்கள் ஆலோசனைக்கு எடுத்துக் கொள்ளப் படும்.

திரு. ஜே. மாதா கவுடர் : அரிசன நல இலாகாவினர் நடத்தும் பள்ளிகளில் வேலை பார்க்கும் ஆசிரியர்களுக்குப் பதவி உயர்வு கொடுக்கப்படும் என்று சொன்னுர்கள். அதுபோல், அரிசன நல இலாகா மூலமாக நடத்தப்படும் கம்யூனிடி சென்டர்களில் வேலை பார்க்கும் சோஷியல் ஒர்கர்களுக்கும் எக்ஸ்டன்ஷன் ஆபீசர் பதவி உயர்வு கொடுக்க ஏதாவது தடை இருக்கிறதா ?

கனம் திரு. சே. ம. அ. மஜீத் : தனியாகக் கேள்வி போட வேண்டும்.

திரு. கொளந்தைசாமி கவுண்டர் : மலைஜாதி மக்களுக்காகப் பள்ளிக்கூடம், பஞ்சாயத்து ஆபீஸ் முதலியவை கட்டுவதுபற்றி ஒன்றரை வருஷமாக நானும் சட்டசபையில் கேட்டுக்கொண்டு வருகிறேன். கலெக்டரையும் கேட்டிருக்கிறேன். தாசில்தாரிடம் எழுதிக் கொடுத்தால், தாசில்தார் வந்து பார்க்கிற வழியாகத் தெரியவில்லை. தாசில்தார் ஆபிசுக்குப் போனுல் ஒன்றுமே தெரிய

வில்லை. மலைஜாதியினர் வசிக்கும் இடத்தில் பஞ்சாயத்துக் கட்டடம், பள்ளிக்கூடக் கட்டடம் கட்டுவதற்கு சர்க்கார் உடனடியாக ஏற்பாடு செய்யுமா? புறம்போக்கு நிலம் இருக்கிறது. அந்த நிலத்தில் வசதி படைத்த ஒருவர் ஒட்டிக்கொண்டு விடமாட்டேன் என்கிறார். ஆகவே, கலெக்டர், தாசில்தாருக்கு உடனடியாக உத்தரவு அனுப்ப அமைச்சர் அவர்கள் முன் வருவார்களா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: கனம் அங்கத்தினர் அவர்கள் தனியாக எழுதியனுப்பினால், சிறந்த முறையில் அரசாங்கம் கவனம் செலுத்தி, அதைக் கவனிக்க முயற்சி செய்யப்படும்.

கனம் சபாநாயகர்: கேள்விகள் முடிவடைந்தன.

[*Note.*—**An asterisk (*) at the commencement of a speech indicates revision by the Member.**]

III. DISPOSAL OF NOTICE OF A PRIVILEGE MATTER.

SRI K. A. MATHIALAGAN : On a point of order, Sir, I have given notice of a Privilege matter. 9–30 a.m.

MR. SPEAKER : I have disallowed it in my Chamber itself. It is not at all a point of order.

SRI K. A. MATHIALAGAN : The Privilege matter has got precedence over Rule 41. The decision has not been communicated to me.

MR. SPEAKER : I have already announced my decision.

SRI K. A. MATHIALAGAN : With great respect, I submit to the Chair that Privilege matters cannot be disallowed in the Chamber itself.

MR. SPEAKER : The hon. Member can write to me about it. I will look into it. First of all, I must convince myself that it is a matter to be raised as a Privilege matter. I am not convinced

SRI V. KRISHNAMOORTHY : The hon. Members of this House are entitled to know the details of the matter and then only the Hon. Speaker is permitted to disallow it.

MR. SPEAKER : The hon. Member is not entitled to know it He should know the rules first.

SRI V. KRISHNAMOORTHY : I know the rules.

MR. SPEAKER : Rule 185 of the Madras Assembly Rules clearly states that a member may, with the consent of the Speaker, raise a question involving a breach of privilege either of a member or of the House. The words used are "with the consent of the Speaker" . The Speaker 'may' or 'may not' give his consent I request the hon. Member to read the rules.